# விழுதுகள்

**தோன்றின விதம்**

நாம் கடந்து வந்த பாதையை உற்று நோக்கினால், நாம் சில சமயங்களில் சரியான முடிவுகளை எடுக்க தவறி இருக்கின்றோம். அல்லது சரியான தகவல்கள் பெறப்படாததால் அவை நம் வாழ்வில் சில முக்கிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றன. குழந்தை பருவத்தில் நமக்கு முறையான வழி காட்டுதல் கிடைத்திருப்பின் நமது வாழ்க்கை தரம் இன்னும் சிறப்பாக அமைத்திருக்கும். மேலும் நமது உயரிய குறிக்கோள்களை அடைய வழி வகுதிருக்கும் என்பதை உணர முடிகிறது.

கிரமப்புறங்களில் இருந்து வந்த இன்றைய இளைஞர்கள் தங்களை உருவாக்கிய இந்த சமுதாயத்திர்க்கு செய்யும் பிரதி பலானகவும், இதுவரை பெறுபவர்களாகவே இருந்த நாம், நம்மாளும் சமூக அக்கறையுடன் சமுதாயா வளர்ச்சிக்கு உதவமுடியும் என்ற எண்ணமே விழுதுகள்.

**எங்களது நோக்கங்கள்:**

1. ஏழ்மை நிலையில் உள்ள இந்திய குழந்தைகளுக்கு, நிலையான மற்றும் தரமிக்க வாழ்க்கையை கல்வி மூலம் வழங்குதல்\
2. மக்களின் அன்றாட வாழ்க்கையில், சுகாதாரத்தின் முக்கிய பங்கு மற்றும் நோய்களை பற்றி விழிப்புணர்வாற்றுதல்
3. வாழ்க்கை தரத்தில் பின்தங்கிய இந்திய கிராமபுற மக்களுக்கு, அவர்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்த உள்ள மாற்று வழிகள் பற்றி அறிவுறுத்தல் மற்றும் அதற்கான உதவிகள் செய்தல்
4. சுற்றுச்சுழல் மாறுபாடுகள், மாசுப்படுத்தலின் தாக்கங்களை வலியுறுத்தி நாங்கள் செய்ய விரும்புவது

நாம் அறிந்தவற்றை மற்றவர்களிடம் பகிர்தல் (அ) மற்றவர்களுக்கு அறிவுறுத்தல் மூலம் குழந்தைகள் அரோக்கியமகவும், தங்களது தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு மகிழ்ட்சியாகவும் வாழ முடியும் என்பதிலும், மேலும் நமது மூத்த சமுதாய மக்களின் வாழ்க்கை தரத்தையும் மேம்படுத்த முடியும் என்பதில் விழுதுகள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளது.

இவைகளை கீழ்க்காணும் வழிமுறைகள் மூலம் செயல்படுத்த உள்ளோம்

ஐ.நா சபை வளர்ச்சி செயலமைப்பின் ஆய்வின் படி உலக அளவில் இந்தியா கல்வி மேம்பாட்டில் 145 இடத்தில் உள்ளது. பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகளின் எண்ணிக்கை 96% என்றபோதும், அவர்களில் உயர்நிலை பள்ளி செல்வோரின் எண்ணிக்கை 40% - 50% குறைக்கிறது. இவை கல்விதுறையால் வெளியிடப்பட்ட முடிவுகள்.

பொருளாதார சுமையே குழந்தைகளை பள்ளியிலிருந்து நிறுத்துவதற்கான முக்கிய காரணமாக பெற்றோர்களால் கூறப்படுகிறது. அவர்கள் தங்கள் குழந்தைகளின் கல்விச் செலவை, சுபோக செலவாகவே கருதுகிறார்கள். குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதினால் அவர்களும் வீட்டு வருமாணத்தை உயர்துவதில் பங்கேற்க முடியும் என நம்புகிறார்கள்.

எனவே குழந்தைகளை பள்ளி செல்ல அனுமதிப்பதில்லை. இதுவே பல நல்ல மாணவர்களுக்கு கல்வி கிடைக்காமல் போக காரணமாகிறது.

**நிதி உதவி:**

ஏழ்மை நிலை காரணமாக படிப்பை தொடர இயலாத மாணவர்களை கண்டறிந்து, அவர்களின் கல்விக்கான தேவைகளை பூர்த்தி செய்வதற்கு நிதிஉதவி செய்கிறோம். மேலும் அவர்களுக்கு வங்கிகளில் கடன் உதவி பெற வழிவகை செய்து தருகிறோம்.

**தொழில்ததுறை வழிகாட்டல்:**

எங்களது ஆய்வானது ,கிரமப்புற மாணவர்கள் பள்ளி படிப்பிற்கு பிறகு தற்போதைய மற்றும் வருங்கால வாய்ப்புகள் பற்றிய அறியாமையை காட்டுகிறது. எனவே விழுதுகள், மாணவர்கள் தாங்களாகவே தங்களுக்கான வாய்ப்புகள் பற்றி அறிந்துணர உதவி செய்கிறது. இத்தகைய செயல்பாடுகள் அனைத்தும் அந்தந்த துறைகளில் வெற்றி கண்டவர்கள் மூலம் நடத்த முடிவு செய்து உள்ளது.

**சுயமுன்னேற்ற தன்னம்பிக்கை பயிற்சி:**

மாணவர்கள் தாங்கள் பள்ளியில் செலவிடும் நேரத்தை மிகவும் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்தி அவர்கள் தங்களின் படைப்பாற்றலை அதிகரிக்கவும் மற்றும் தேர்வில் நல்ல மதிப்பெண்களையும், சிறந்த செயல்முறை அறிவையும் பெற உதவுகிறது. எங்களது பயிற்சிகள் அவர்களின் கற்றல் திறமையை உயர்த்த, நினைவாற்றலை அதிகரிக்க, கையெழுத்து மேம்பட, கருத்துகளை சரியான முறையில் தெரிவிக்க, தன்னம்பிக்கை ஏற்படுத்த உதவும்.

**பொது உடல்நலம்:**

சுவர் இல்லாமல் சித்திரம் வரையமுடியாது என்பதுகேற்ப பொருளாதார முன்னேற்றத்தில் பொது சுகாதாரம் என்பது மிக முக்கிய பங்கு வகிக்கிறது. நல்ல உடல்நலம் பேணுதல் என்பது ஏழை சமுதாயத்திற்கு கிடப்பதற்கரியதாகவே உள்ளது. இவைகள் கிடைப்பதற்கு விழுதுகள் முனைப்புடன் செயல்படுகிறது.

இவர்களில் பெரும்பான்மையான மக்கள் அன்றாடம் இரண்டு வேலை உணவு கூட பெற இயலாத நிலையில் உள்ளனர். சிகிச்சை செலவுகளை ஏற்க முடியாத நிலையில் உள்ள ஏழை மக்களுக்கு உடல் நலம் பேணுதல் என்பது மிக கடினமான செயலே. இன்னும் கொடுமையானது என்னவெனில் அவர்களுக்கு தங்களை நோய்கள் மற்றும் இறப்பிலிருந்து காப்பாற்ற உதவும் சுகாதாரத்திணை பற்றிய விழிப்புணர்வு மிகவும் குறைவாகவே இருக்கிறது.

இந்நிலை மாறி சுகாதாரம் பற்றிய அறிவு தழைத்தோங்குதல் மிகவும் அவசியமானதாகும். நல்ல ஆரோக்கியமான வாழ்க்கைக்கு உதவும் சுகாதாரம், உடல்நலம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல் மற்றும் உடல்நலம் சார்ந்த துறைகளில் செயலாற்ற விழுதுகள் மிக்க விருப்பமுடன் இருக்கிறது.

## வாழ்வதாரத் தேவைகளை மேம்படுத்துதல்:

பின்தங்கிய மக்களின் வாழ்வதாரம் என்பது, அடிப்படையில் தனிப்பட்ட மனிதன் அல்லது குறிப்பிடத்தக்க சமூகத்தின் அடிப்படை தேவைகளான உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றை பெறுவதற்கான வழிவகை செய்தல். மக்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் அவர்களை சுயசார்புடன் தங்கள் வாழ்வை வழி நடத்த உதவுகிறது.

பெரும்பான்மையான மக்கள் கவனிக்க தவறிய, ஆனால் தேசிய பொருளாதார உயர்வுக்கு முக்கிய காரணமாக இருக்கும் கிராமப்புற ஏழை மக்களின் உயர்வுக்காக விழுதுகள் செயல்படுகிறது. இவர்களின் வாழ்வதாரத்தை மேம்படுத்த, அவர்களின் வாழ்க்கைக்கான மாற்று வாழ்வதார வழிகளில் செயல்பட்டு அவர்கள் நகர் புறங்களை நோக்கி செல்வதை தவிர்க்க வழிவகை செய்ய திட்டமிட்டுள்ளோம்.

## நாங்கள் விரும்பும் மாற்றங்கள்:

மாணவ சமூகம் தங்களது வாழ்வில், தன்னம்பிக்கை, உயர்ந்த அணுகுமுறையுடன் செயல்படுவதையும், தரமிக்க சமுதாயத்தையும், ஏழை மக்களின் வாழ்க்கை தரத்தை நிலை நாட்டுவதிலும் மாற்றங்கள் ஏற்படுத்த எதிர் கொண்டுள்ளோம்.

## இதுவரை விழுதுகள்:

தேனி மாவட்டத்தில் கட்டிட வேலைக்கு செல்லும் ஒரு ஏழை தாயின் மகன் ராஜேஷ் கண்ணன். இவர் +2 வில் 1200 க்கு 975 மதிப்பெண்கள் பெற்று அவரது பள்ளியில் முதலிடம் பெற்றார். ஆனால் அவர் தனது பொறியாளர் ஆகும் கனவை நிறைவேற்ற நிதிஉதவி தேவைபட்டது. விழுதுகள் இந்த இளைய குடிமகனின் நியமான ஆசையை அங்கீகரித்து அவரின் கனவினை நிறைவேற்ற உதவ முன்வந்துள்ளது. அவர் தற்பொழுது திண்டுகல் மாவட்டம் பழநியில் உள்ள ஸ்ரீ சுப்ரமணியா பொறியியல் கல்லூரியில், இளநிலை பொறியியலில் மின்னனு மற்றும் தகவல் தொலைத்தொடர்பியல் முதலாம் ஆண்டு படிக்கிறார். அவரின் கல்லூரி படிப்பு முடியும் வரை அனைத்து படிப்பு செலவுகளையும் விழுதுகள் ஏற்றுக்கொள்ளும். அவரின் 4 வருட கல்விக்கான செலவு 2.5 லட்சமாக கணக்கிடப்பட்டுள்ளது.

VIZHUTHUKAL

**நீங்களும் விழுதுகளுக்கு உதவலாம்:**

**விழிப்புணர்வு ஏற்படுத்துதல்:**

உங்களுக்கு தெரிந்த நண்பர்களுக்கு எங்களை பற்றின செய்திகளையும், எங்களது கொள்கைகளையும் தெரியப்படுத்துங்கள். ஒவ்வொருவரும் தங்களால் ஆன உதவிகளை செய்யும்பொழுது விழுதுகள் மேலும் சிறப்பாக செய்யல்பட வழி வகுக்கும்.

**தன்னார்வ தொண்டர்கள்:**

நாங்கள் உங்களை போன்ற தன்னர்வதுடனும் துடிப்புடனும் உதவும் உள்ளங்களின் உழைப்பை எதிர்பார்க்கின்றோம். உள்ளூர் தன்னார்வலர்கள், கிரமப்புரங்களில் எங்களின் சேவையை பின்தங்கிய மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்களுக்கு எடுத்து செல்ல தேவைப்படுகிறார்கள்.

நீங்கள் எங்களுக்கு இத்தகைய சிறு சிறு உதவிகளை செய்யமுடியுமென்றால், எங்களுக்கு கை கொடுத்து உதவுங்கள்.

**நிதிஉதவி அளித்தல் :**

உங்களாலான சிறிய நிதி உதவி ஏழை மக்களின் வாழ்வை மேம்படுத்தவோ, வருங்கால சமுதாயத்தை சீர்படுத்தவோ உதவலாம். உங்களின் சிறு உதவி பெரும் மாற்றத்தை ஏற்படுத்தலாம்.

எங்களது சேவைகள் உங்களை போன்ற நல்லுள்ளங்களின் நன்கொடையை நம்பியே உள்ளது.

**தொழில்நுட்ப ஒத்துழைப்பு :**

நீங்கள் இணையதள கட்டமைப்பு, உட்பொருள் உருவாக்கம், செய்தி வடிவமைப்பு போன்ற பணிகளில் எங்களுக்கு உதவலாம். தினம் சில மணித்துளிகளை இச்செயல்களுக்காக செலவிட இயலும் தகவல்தொழில் நுட்பம் சார்ந்த பங்களிப்பாளர்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**இணைந்து பணியாற்றுதல்:**

எங்களது பணிகளுக்கு உங்களாலோ அல்லது நீங்கள் பணியாற்றும் நிர்வாகத்தின் மூலமாகவோ எங்களது செயல்களுக்கு முழு நிதி உதவி அளிக்க முன்வருவோரை வரவேற்கின்றோம். நமது நோக்கங்கள் ஒரே மாதிரியாக இருப்பின் விழுதுகள் தங்களுடன் இணைந்து சேவை செய்ய தயாராக உள்ளது.

VIZHUTHUKAL

**<u>கிராமப்புற மாணவர்களுக்கான பயிற்சி:</u>**

கிராமபுர மாணவர்களின் பேச்சாற்றல் திறன், வெளிப்படுத்தும் திறன் மற்றும் சுய முன்னேற்ற அறிவு, ஆகியவற்றில் பயிற்சி அளிக்க இத்துறையில் முன்னுபவமும், சேவை செய்யும் மனப்பான்மையும் உள்ளவர்கள் எங்களை அணுகவும்.

மேலும் நாங்கள் உடல் நலம் பற்றிய விழிப்புணர்வினை இந்திய கிராமபுர மக்களிடம் ஏற்படுத்த, குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ச்சியாக செயலாற்ற இயலும் உடல்நல நிபுணர்களை எதிர்பார்க்கின்றோம்.

**தங்களின் பங்களிப்பை வேறு ஏதேனும் முறையில் அளிக்க முடியும் எனில் எங்களை தொடர்புகொண்டு தெரியப்படுத்தவும்.**

**<u>தொடர்புக்கு:</u>**


| | |
|---|---|
| தொலைபேசி மூலம் தொடர்புகொள்ள: | +91 99404 11334 / +91 99449 61213 |
| மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ள: | help@vizhuthukal.org |
| கடிதம் மூலம் தொடர்புகொள்ள: | VIZHUTHUKAL TRUST,<br>Old No: 106, New No: 91,<br>1st Floor, Sri Arcade, 1st Main Road,<br>D Block, Chintamani, Anna Nagar East,<br>Chennai, Tamil Nadu, India. Pin : 600 102 |
| இணையததளம் மூலம் தொடர்புகொள்ள: | www.vizhuthukal.org |